# ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் வருமானத் திணைக்களத்தின் வரி உத்தியோகத்தர் தரம் II இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2025

ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் மாகாண வருமானத் திணைக்களத்தின் வெளிகள/அலுவலக உத்தியோகத்தர் பிரிவு 2 ன் சேவை பிரிவின் வரி உத்தியோகத்தர் தரம் II பதவியில் காணப்படும் வெற்றிடங்கள் 03 இற்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகைமைகளை உடைய ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவை கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து 2025.11.28 திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொது தகைமைகள்;**

   I. விண்ணப்பதாரர் பரம்பரையாக அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

   II. விண்ணப்பதாரர் விண்ணப்ப படிவம் கோரப்படும் இறுதுத் திகதியன்று ஊவா மாகாணத்தில் குறைந்தப்பட்சம் 03 வருட நிரந்தர வதிவை உடையவராக காணப்பட வேண்டியதுடன், வாக்காளர் பெயர் பட்டியலின் ஊடாக அல்லது கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும் குறிப்பிட்ட படிவத்தின் ஊடாக வதிவை சான்றுப்படுத்த வேண்டும்.

   III. சகல விண்ணப்பதாரிகளும் சிறந்த நடத்தை உடையவராக மற்றும் சிறந்த உடல் தகுதி உடையவராக இருத்தல் வேண்டியதுடன் ஊவா மாகாணத்தின் எந்தவொறு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேறுறுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள தகுதியுடன் கூடியவராக காணப்பட வேண்டும்.

   IV. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதியன்று 21 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு அதிகமாகாமலும் இருத்தல் வேண்டும்.

   V. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக குறித்த விண்ணபதாரி விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் அனைத்தையும் சகல விதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

2. **கல்வித் தகைமைகள்;**

   I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

   II. பட்டய கணக்காளர் நிறுவனத்தில் வியாபார முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் II ஆம் மட்டதில் சித்தியெய்திருத்தல், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் கணக்கியல் அல்லது வியாபரம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழினை பெற்றிருத்தல்.

அல்லது

III. உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருத்தல்.

3. **சம்பள அளவுத்திட்டம்;**
பொது நிருவாக சுற்றறிக்கை 10/2025 ன் MN-5-2025 இற்கு ஏற்ப ரூபா. 58,660/- 10 x 1,190 - 11 x 1,360 - 15 x 1,670 - ரூ. 110,570/- சம்பள அளவுத்திட்டத்தின் I ஆம் படிமுறையாகிய ரூபா. 58,660/= ஆகுவதோடு, மேற் குறித்த சுற்றறிக்கையின் உப ஆவணம் III இற்கு ஏற்ப 2027.01.01 ஆம் திகதி வரை சம்பளம் வழங்கப்படும்.

4. **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறை;**

பரீட்சை ஆணையானர் நாயகத்தினால் அல்லது ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அல்லது ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குவினால் தீர்மானிக்கப்படும் வேறு ஏதேனும் நிறுவனத்தின் ஊடாக நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறிற்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்து மூல பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்தாரர்களின் முழு புள்ளிகளின் அடிப்படையில் திறமை அடிப்படையில் அதிக புள்ளிகளை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளை பொது நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தகைமைவாய்தவர்கள் தேர்தெடுக்கப்படுவர். நேர்முக பரீட்சைக்காக தேர்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

இப்போட்டிப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் முழு பரீட்சைக்குமே ஒரே மொழி மூலத்தில் தோற்ற வேண்டும். எந்தவொறு காரணத்திற்காகவும் பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

I. எழுத்து மூல போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம்;
இப்பரீட்சையானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள வினாப்பத்திரம் மூன்றுடன் கூடியதாக காணப்படும்.

| பாடம் | அதிகப்பட்ச புள்ளிகள் | காலம் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| கிரகித்தல் | 100 | 01 மணித்தியாலம் | 40% |
| நுண்ணறிவு | 100 | 01 மணித்தியாலம் | 40% |
| பொது அறிவு | 100 | 01 மணித்தியாலம் | 40% |

- **பாட இலக்கம் 01 – கிரகித்தல்**
இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியதாக காணப்படும். ஒவ்வொறு பகுதியும் சமமான புள்ளிகளுடன் கூடியதாக இருக்கும்.

**I ஆம் பிரிவு;**
கட்டுரை மற்றும் சாராம்சம் எழுதுதல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**II ஆம் பிரிவு:**

இது விண்ணபதாரியின் மொழிப் புரிதலைச் பரீட்சிக்க வடிவமைக்கப்பட்ட பல உரைகளைக் கொண்டுள்ளது. இந்த உரைகளின் அடிப்படையில், விண்ணபதாரிகள் அடிக்கோடிட்ட சொற்களின் அர்த்தத்தை ஒரே வாக்கியத்தில் வெளிப்படுத்த வேண்டும் அல்லது அவற்றைப் பற்றிய விளக்கக் குறிப்புகளை எழுத வேண்டும், அல்லது பதிலீடுகளின் தொகுப்பிலிருந்து மிகவும் பொருத்தமான கூற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும், அல்லது கொடுக்கப்பட்ட கேள்விக்கு பல பதில்களிலிருந்து சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து குறிப்பிட வேண்டும்.

- **பாட இலக்கம் 02 – நுண்ணறிவு**

  விண்ணபதாரர்களின் தர்க்கரீதியான பகுத்தறிவு, பகுப்பாய்வு திறன் மற்றும் துல்லியமான அனுமானங்களைச் மேற்கொள்ளும் திறன் என்பவற்றை அளவிட வடிவமைக்கப்பட்ட பல தேர்வு வினாக்களை கொண்ட வினாப்பத்திரமாகும்..

- **பாட இலக்கம் 03 – பொது அறிவு**

  இலங்கையின் புவியியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார சூழல், சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த தற்போதைய நிகழ்வுகள், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் உட்பட, இலங்கையின் முழு சூழலைப் பற்றிய அறிவைச் பரிசீலிக்கம் முகமாக தயாரிக்கப்பட்ட வினாத்தாள் ஆகும்.

II. **பொது நேர்முகப் பரீட்சை: எந்த புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது என்பதுடன் நேர்முகப் பரீட்சை குழுவானது ஊவா மாகாண சபை பொது சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.**

அடையவேண்டிய குறிக்கோள்கள்; ஊவா மாகாண வரி உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் இதற்கேற்ப வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிப்பதற்காக மற்றும் உடல் தகுதியை பரிசீலிப்பதற்காக.

குறிப்பு; நேர்முகப் பரீட்சைக்காக வரவழைப்பதற்கான விண்ணபதாரர்கள் எண்ணிக்கையானது சந்தர்ப்பத்திக்கு ஏற்றவாறு எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியெய்துள்ள விண்ணப்பதாரர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட முழுப் புள்ளிகளின் திறமை முன்னுரிமை அடிப்படையில் மற்றும் ஆட்சேர்ப்பு செய்வதற்காக தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு ஏற்ப ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

5. **விண்ணப்பங்களை முன்வைத்தல்;**

I. இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்கள் https://exams.psc.up.gov.lk/ என்ற இணைய இணைப்பு வழியாக நிகழ்நிலை விண்ணப்ப அனுலை அனுகி 2025.11.28 திகதி அல்லது அதற்கு முன் பரீட்சைக்கான நிகழ்நிலை விண்ணப்ப படிவத்தினை பூரணப்படுத்த வேண்டியதுடன், விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து முறைமைக்கு சமர்ப்பித்த (Submit) பிறகு விண்ணப்பத்தின் மென் பிரதியை (மெனுவில் Applicationனை அணுகவும்) பதிவிறக்கம் செய்துக்கொள்ள

வேண்டும். பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் வன் பிரதியில் பரிந்துரைக்கப்பட்ட இடத்தில் பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டி, கையொப்பத்தை சான்றளித்து, 2025.12.05 அன்று அல்லது அதற்கு முன்னர் **"செயலாளர், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, எண் 14/4, பீலிபொத்தகம வீதி, பிங்கராவை, பதுளை"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உரையின் இடது மேல் மூளையில் **"ஊவா மாகாண வருமானத் திணைக்களத்தின் வரி உத்தியோகத்தர் தரம் II இற்கான பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2025"** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

II. இறுதித் திகதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள், முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்ப படிவங்கள் மற்றும் இறுதித் திகதியன்று குறித்த தகைமைகளை கொண்டிறாத விண்ணப்ப படிவங்கள் எந்தவித அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும். தாமதமான அல்லது தொலைந்த விண்ணப்ப படிவங்கள் தொடர்பான எந்த முறையீடுகளும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

III. தற்போது மாகாண அரசாங்க சேவையில் அல்லது மத்திய அரசாங்கத்தில் கடமை புரியும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்ப படிவங்களை திணைக்கள தலைவர் ஊடாக சமர்ப்பிக்கவேண்டும்.

6. **பரீட்சை மற்றும் நிருவாக கட்டணங்கள்;**

பரீட்சை கட்டணம் மற்றும் நிர்வாகச் செலவுகள் ரூ. 1250/- ஆகும். இக்கட்டணத்தினை **ஊவா மாகாணத்தின் பிரதான செயலாளரின் வருமான தலைப்பு 20.03.02.13 ற்கு வரவு வைக்கப்பட தக்கதாக ஊவா மாகாணத்தின் காணப்படும் எந்தவொறு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும்** பணமாக செலுத்தி விண்ணப்பதாரரின் பேரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை அதன் ஒரு பக்கத்தினை விண்ணப்பப் படிவத்தில் பரிந்துரைக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்ட வேண்டும். எதிர்கால பயன் கருதி பற்றுச்சீட்டின் நிகழ்ப்பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பயன்தக்கதாகும். ஊவா மாகாணத்தின் பிரசே செயலாளர் அலுவலகத்தில் பணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டினை தவிர வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டுக்கள், காசு கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படாத அதேவேலை அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணமானது எந்தவொறு காரணத்திற்காகவும் திரும்பப் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

7. **பரீட்சை அனுமதி அட்டையினை பதிவறக்கம் செய்தல்;**

பரீட்சை நடைபெறுவதற்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்தாக அனுமதி அட்டைகள் மின்னஞ்சல் (E-mail) மூலம் அனுப்பப்படுவதோடு, பரீடசைக்காக

விண்ணப்பிக்கும் போது மின்னஞ்சல் முகவரியினை சரியாக குறிப்பிடுட்டிருத்தல் வேண்டும். பரீட்சை திகதிக்கு ஒரு கிழமைக்கு முன்னதாக அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அது தொடர்ப்பில் குறித்த திணைக்களத் தலைவரினூடாக அல்லது ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் விண்ணப்படிவத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி, பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியுடன் அனுமதி அட்டையினை அனுப்புவதற்காக வட்ஸ்அப் (WhatsApp) இலக்கம் ஒன்றினை குறிப்பிட்டு கோரிக்கை ஒன்றினை முன்வைக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக https://exams.psc.up.gov.lk/admission/ இணைப்பின் ஊடாக பரீட்சை அட்டையினை பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகள் மேற்கொள்ளப்படும்.

8. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை சான்றுப்படுத்தல்;**

   I. ***மாகாண அரசாங்க சேவை / மத்திய அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களின் கையொப்பத்தனை சான்றுப்படுத்தல்:***

   விண்ணப்பதாரரின் கையொப்பம் விண்ணப்பப் படிவத்திலும் பரீட்சை அனுமதி அட்டையிலும் சான்றுப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை தனது நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியினால் சான்றுப்படுத்தியிருக்க வேண்டும்.

   II. ***அரசாங்க சேவையில் இல்லாத விண்ணப்பதாரர்களின் கையொப்பத்தினை சான்றுப்படுத்தல்;***

   விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசு பாடசலையின் அதிபர் / பிரதேச கிராம அலுவலர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையர் / பொதுச் சட்டத்தரணி / முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட மேற்பார்வை அதிகாரி / பொலிஸ் சேவையில் வர்த்தமானி பதவியை வகிக்கும் அதிகாரி / அரசு அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவியை வகிக்கும் நிரந்தர நிரைவேற்று தர அதிகாரி ஆகியோரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

9. இந்தப் போட்டிப் பரீட்சையானது பதுளை மற்றும் மொனராகலை ஆகிய நகரங்களில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து பரீட்சை நடாத்தபடும் நகரம் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

10. பரீட்சை தினத்தன்று பரீட்சகரின் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக ஆட் பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை, செல்லுப்படியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுப்படியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவ் ஆவணங்கள் தவிர்ந்த வேறு ஆவணங்கள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. பரீட்சார்த்திகள் தமக்கு நியமிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு அமர வேண்டும். பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் உட்பட்டவர்களாவார்கள். அவ்விதிகளை மீறப்பட்டுருந்தால், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

12. **போலியான தகவல்களை வழங்குதல்:**

இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக யாதாயினும் விண்ணப்பதாரர் ஒருவர் தகைமையற்றவர் என தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைப்பெறும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படுவதற்கு இடமுண்டு. சேவையிட்கு நியமிக்கப்பட்ட பின்னரான சந்தர்ப்பத்தில் விண்ணபதாரர் சமர்ப்பித்த தகவல் போலியானது என அல்லது நன்கு அறிந்தும் போலியான தகவல்ளை சமர்ப்பித்துள்ளார் என அல்லது வேண்டும் என்றே உண்மையான தகவல்களை மறைத்துள்ளார் என தெரியவந்தால் அவரது பதவி வரிதாக்கப்படுவதற்கு இடமுண்டு.

13. இப்பதவிக்காக நியமனம் வழங்குதல் / வழங்காமல் இருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கையில் ஒரு பகுதியினை பூரணப்படுத்தல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பில் அல்லது இது தொடர்பிலான விடயம் சார்ந்த இறுதி முடிவு ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும். அதேபோல இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத எந்தவொறு விடயம் தொடர்பாக விளக்கமளித்தல் / தீர்மானம் எடுத்தல் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலின் மொழிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
15. இது தொடர்பிலான மேலதிக விடயங்களை அலுவலக நேரத்தினுள் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலக தொலைப்பேசி இலக்கம் 0552222400, 0552231460 இற்கு அழைப்பினை மேற்கொள்ளுவதன் ஊடாக பெற்றுக்கொள்ள இயலும்.

(எல்.ஏ. சோமரத்ன)
செயலாளர்
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

2025.11.10 திகதி.
பதுளை
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திலிருந்து.